1970 செப்டம்பர் 5]

திரு. கே. விநாயகம் : சங்கத் தலைவர் பொய்யாகக் குற்றஞ் சாட்டினார்களா, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது எல்லாம் வேறு விஷயம். சங்கத் தலைவர் சொன்னதைப்போல செயலாளர் நடக்கவில்லை ஏன்பதற்கு ரெக்கார்டு பூர்வமாக ஆதாரம் இருந்தால் அதைப் படிக்கவேண்டும். ஆதாரம் இல்லாது சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வாறு பதில் அளிக்க வேண்டும் என்பதற்கு அமைச்சருக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் முன்பே சொன்னபடி, செயலாளர், ரசாயன உர விற்பனையில் 59 டன் கையிருப்பு வைத்துக் கொண்டது, தம்முடைய ஆணைப்படிதான் என்று மாவட்ட ஆட்சியாளர் பதில் அளித்திருப்பதனால், நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் மாவட்ட ஆட்சியாளர் மீதுதான் எடுக்க வேண்டுமே தவிர, செயலாளர் மீது அல்ல.

அலுவலர் கூட்டுறவுப் பண்டகசாலை, திருமயம்

*256 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயத்தில் அமைந்திருந்த அலுவலர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூடப்பட்டுள்ளதின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திருமயம் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை 1960-இல் இருந்து தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 23—9—1967-இல் முழுக்க செயல்படும் நிலை அற்றதாகிவிட்டது. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 85-வது பிரிவின் பிரகாரம் அந்தப் பண்டகசாலையை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : திருமயம் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலையை மூடிவிடுவதற்கான காரணங்களை இந்த அரசு நன்கு ஆய்ந்ததா? அந்தக் காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் முதலிலேயே சொன்னபடி 1960-இல் இருந்தே தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 23—9—1967 அன்றைய நிலவரப்படி சங்கத்தின் சொத்து நிலவரங்களோடு பார்க்கிறபோது ரூ. 9,683-60 நட்டம் காணப்பட்டது. இப்படி அதுவே செயலற்றதாகிவிட்ட காரணத்தினால் மூடிவிட உத்தரவிடப்பட்டது.

Sri Kandaswami Temple Devasthanam

*257 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the process adopted in the matter of appointment of trustees to the Devasthanam of Sri Kandaswami temple in the City of Madras ; and

(*b*) whether preference is shown to the community of Beri Chettier under a scheme framed by the High Court?